بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 7

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

18 ஜமாதியுல் சானி 1441 ஹிஜ்ரி கமரி 13 தப்லீக் 1399 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி 13 பிப்ரவரி 2020


## அல்லாஹ்வின் கட்டளை

وَلَا تَحْسَبَنَّ الَّذِيْنَ قُتِلُوْا فِيْ سَبِيْلِ اللّٰهِ اَمْوَاتًا ؕ بَلْ اَحْيَآءٌ عِنْدَ رَبِّهِمْ يُرْزَقُوْنَ ۙ﴿۱۷۰﴾

அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டவர்களை, மரணித்தவர்கள் என்று நீங்கள் ஒருபோதும் எண்ண வேண்டாம். மாறாக, அவர்கள் தங்கள் இறைவனிடம் உயிருள்ளவர். (மேலும்) அவர்கள் (ஆன்மீகமாக) உணவளிக்கப்படுகின்றனர். (3:170)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

# ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்பான முன்னறிவிப்பு

ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் 20 பிப்ரவரி 1886 –ல் ஒரு பிரசுரத்தை வெளியிட்டார்கள். அதில் ‘வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி’ தொடர்பாக ஒரு மகத்தான முன்னறிவிப்பைப் பற்றிக் குறிப்பிட்டவாறு அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

எல்லாவற்றிற்கும் ஆற்றல் பெற்றுள்ள கம்பீரமிக்க கருணையுள்ள மேலான இறைவனாகிய அல்லாஹ் (جَلَّ شَانُهٗ وَعَزَّ اِسْمُهٗ) தனது இறையறிவிப்பின் மூலமாக என்னை நோக்கி இவ்வாறு கூறினான்: அதாவது நீர் என்னிடம் கேட்டதற்கிணங்க நான் அருளின் ஓர் அடையாளத்தை உமக்குத் தருகின்றேன். நான் உமது மன்றாடல்களை செவியுற்றேன். மேலும் நான் என் அருள்களால் உமது துஆக்களை ஏற்றுக் கொண்டேன். (லூதியானா, ஹோஷ்யார்பூரை நோக்கி நீர் மேற்கொண்ட) உமது பயணத்தை உமக்கு அருளுக்குரியதாக ஆக்கினேன்.

எனவே ஆற்றல், அருள், இறை நெருக்கம் ஆகிய அடையாளங்கள் உமக்கு அளிக்கப்படுகின்றன. அருள், பேரருள் ஆகிய அடையாளங்கள் உமக்கு வழங்கப்படுகின்றன. வெற்றி வாகையின் திறவுகோல் உமக்கு கிடைக்கிறது. வெற்றி பெற்றவரே! உம்மீது சாந்தி உண்டாவதாக. வாழ்க்கையை விரும்புபவர்கள் மரணத்தின் பிடியிலிருந்து தப்பிப்பதற்காகவும், கல்லறைகளில் அமுங்கிக் கிடப்பவர்கள் வெளியில் வருவதற்காகவும் இறைவன் இதை கூறியிருக்கிறான்.

மேலும் இஸ்லாம் மார்க்கத்தின் சிறப்பு, அல்லாஹ்வுடைய வார்த்தையின் அந்தஸ்து மக்களுக்கு வெளிப்படுத்துவதற்காகவும், உண்மை தனது எல்லா அருள்களுடனும் வந்து விடுவதற்காகவும், பொய் தனது அனைத்து தீய சகுனங்களுடனும் வெருண்டோடி விடுவதற்காகவும் இறைவன் இதைக் கூறியுள்ளான்.

மேலும் நான் ஆற்றல் மிக்கவன் எனவும், விரும்பவுதை செய்கின்றேன் எனவும் மக்கள் புரிந்து கொள்ளட்டும். நான் உம்முடன் இருக்கிறேன் என அவர்கள் உறுதி கொள்ளட்டும். மேலும் எவர்கள் இறைவனுடைய இருப்பு பற்றி நம்பிக்கை கொள்வதில்லையோ, மேலும் இறைவனுடைய மார்க்கத்தையும், அவனுடைய வேதத்தையும் அவனுடைய தூய தூதர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களையும் மறுத்தல் மற்றும் பொய்ப்படுத்துதல் என்ற பார்வையுடனும் பார்க்கிறார்களோ அவர்களுக்கு ஓர் அடையாளம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், குற்றவாளிகளின் வழியை வெளிப்படுத்துவதற்காகவும் இறைவன் இதைக் கூறியுள்ளான்.

எனவே உமக்கு ஒரு நற்செய்தி! கம்பீரமான தூய ஒரு மகன் உமக்கு வழங்கப்படுகிறது. ஒரு தூய குழந்தை உமக்குக் கிடைப்பார். அந்த மகன் உமது வித்திலிருந்தே உமது சந்ததி, வழித்தோன்றலாக இருப்பார். அழகிய, தூய மகன் உமது விருந்தினர் வருகிறார். அவரது பெயர் இம்மானுவேல் மற்றும் பஷீர் என்பதுமாகும். அவருக்கு பரிசுத்த ஆவி வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் அவர் அசுத்தத்திலிருந்து தூயவராக இருப்பார். அவர் அல்லாஹ்வின் ஒளியாவார். வானத்திலிருந்து வரும் அவர் அருளுக்குரியவராக இருக்கிறார். அவருடன் அருள் இருக்கிறது. அது அவர் வரும்போது உடன் வரும்.

அவர் கண்ணியத்திற்குரியவராகவும், மகத்துவம் கொண்டவராகவும், செல்வம் உடையவராகவும் இருப்பார். அவர் உலகில் வருவார். மேலும் தமது மஸீஹின் ஆவியினாலும் உண்மையின் ஆவியின் அருளினாலும் அதிகமானோரை நோயிலிருந்து தூய்மைப்படுத்துவார். அவர் அல்லாஹ்வின் வார்த்தையாவார். ஏனெனில் இறைவனுடைய கருணையும் தன்மானமும் அவரை கண்ணியத்திற்குரிய வார்த்தையுடன் அனுப்பியிருக்கிறது.

அவர் மிகவும் புத்திக் கூர்மை உள்ளவராகவும், நுண்ணிய அறிவுடையவராகவும் இருப்பார். மேலும் உள்ளத்தால் சகிப்புத்தன்மை கொண்டவராகவும் இருப்பார். மேலும் உள்ளத்தால்சகிப்புத்தன்மை கொண்டவராகவும் இருப்பார். மேலும் வெளிப்புறமான, உட்புறமான ஞானங்களால் அவர் நிரப்பப்படுவார். மேலும் அவர் மூன்றை நான்காக்குபவராக இருப்பார். (இதன் பொருள் புரியவில்லை). திங்கள்கிழமை, வாழ்த்துக்குரிய திங்கள் கிழமை. அவர் உயர்ந்த தகுதியிலுள்ள மிகவும் கண்ணியத்திற்குரிய புதல்வராவார்.

مَظْهَرُ الْاَوَّلِ وَالْاٰخِرِ. مَظْهَرُ الْحَقِّ وَالْعُلَاءِ كَاَنَّ اللّٰهَ نَزَلَ مِنَ السَّمَاءِ அவர் ஆரம்பம், முடிவின் தோற்றமாகவும், உண்மை, உயர்வின் தோற்றமாகவும் இருக்கிறார். அல்லாஹ் வானிலிருந்து இறங்கி வந்தது போன்றிருக்கும். அவருடைய வருகை மிகவும் அருளுக்குரியதாகவும், இறை கம்பீரத்தை வெளிப்படுத்துவதற்குக் காரணமாகவும் அமையும். இறைவன் தன் திருப்தி எனும் நறுமணத்தால் மணம் கமழ வைத்த ஒளி வருகிறார்.

நாம் அவரிடத்தில் நமது ஆவியை ஊதுவோம். இறைவனின் நிழல் அவர் தலை மீது இருக்கும். அவர் மிக விரைவில் முன்னேறுவார். கைதிகளை விடுவிப்பதற்குக் காரணமாகத் திகழ்வார். மேலும் பூமியின் எல்லைகள் வரை புகழ் பெற்று விளங்குவார். சமுதாயங்கள் அவரிடமிருந்து அருள்களைப் பெற்றுக் கொள்ளும். பின்னர் அவர் வானத்தின் பக்கம் உயர்த்தப்படுவார். وَكَانَ اَمْرًا مَّقْضِيًّا – இது தீர்மானிக்கப்பட்டு விட்ட ஒன்றாகும்.

(மஜ்முஆ இஷ்திஹாராத் தொகுதி 1 பக்கம் 100)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கலப்பற்ற மற்றும் பற்றுணர்வுமிக்க சஹாபியான ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 10 ஜனவரி 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **சுலஹ்** மாதம் **10 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த குத்பாவில் வக்ஃபே ஜதீதின் புதிய வருடத்திற்கான அறிவிப்பை செய்ததுடன் நாடுகளின் உள்ள ஜமாஅத்துகளின் தரவரிசை நிலவரத்தை கூறியிருந்தேன். வக்ஃபே ஜதீத் சந்தா வசூலின் அடிப்படையில் யூ.கே ஜமாஅத்துகளில் இஸ்லாமாபாத் முதலிடம் வகிக்கின்றது என்று நான் கூறியிருந்தேன். ஆனால் அந்த ஆய்வு தவறானதாக இருந்தது என பிறகு தெரிய வந்துள்ளது. வோல்டர்ஷா ஜமாஅத் முதலிடத்திலும், இஸ்லாமாபாத் ஜமாஅத் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது. இது ஏன் நிகழ்ந்தது? எவ்வாறு நிகழ்ந்தது? என்பதன் விளக்கத்தின் பக்கம் நான் செல்ல விரும்பவில்லை. எவ்வாறிருப்பினும் இந்த திருத்தம் அவசியமானதாக இருந்தது. எனவே நான் முதலில் அதனை எடுத்துக் கூறி விட்டேன்.

வோல்டர்ஷா ஜமாஅத் மாஷா அல்லாஹ் பெரும் தியாகங்களை செய்து வருகிறது. குறிப்பாக வோல்டர்ஷா லஜ்னா அமைப்பின் தலைவி எவ்வாறு பல்வேறு பெண்கள் அசாதாரண தியாகங்களை செய்துள்ளனர் என்று எனக்கு எழுதியுள்ளார்கள். அவர்களின் இந்த தியாகம் முன்னுதாரணமானதாகும். அல்லாஹ் அவர்களின் செல்வங்களிலும் வாழ்நாளிலும் பரக்கத்தை வழங்குவானாக.

நான் கடந்த குத்பாவில் பொதுவாக ஏழைகளுடைய மற்றும் ஏழை நாடுகளில் வசிக்கக் கூடியவர்களின் தியாகத்தின் சம்பவங்களை எடுத்துரைத்திருந்தேன். பணக்காரர்களுக்கு அந்த உணர்வு ஏற்பட வேண்டும் என்பதற்காகவும், அவர்கள் உயிரோட்டத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் நான் அந்த தியாகத்தை எடுத்துக் கூறியிருந்தேன். இறை அருளால் இந்த முன்னேற்றமடைந்த நாடுகளில் நமது ஜமாஅத்தில் ஏராளமானவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் உலகத்தின் தேவைகளை முதுகுக்குப் பின்னால் தூக்கி வீசி விட்டு தியாகங்கள் செய்து கொண்டிருக்கின்றனர். எவ்வாறிருப்பினும் நான் கூறியது போன்று இங்கிலாந்து ஜமாஅத்துகளில் வக்ஃபே ஜதீதைப் பொறுத்தவரை வோல்டர்ஷா ஜமாஅத் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இப்போது நான் இன்றைய குத்பாவின் தலைப்பின் பக்கம் வருகின்றேன். பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபாக்களின் குறிப்புகள் எடுத்துரைக்கப்பட்டு வருகின்றன. கடந்த வாரத்திற்கு முந்தைய வார குத்பாவில் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களின் குறிப்பு கூறப்பட்டு வந்தது. மேலும் கொஞ்சம் எஞ்சியும் விட்டது. இன்றும் கூட அவர்களின் குறிப்பை எடுத்துரைப்பேன். ஆனால் ஒரு ஆதாரத்தின் விளக்கத்தை திருத்துவது அவசியமாகும். கடந்த குத்பாவில் அந்த ஆதாரத்தை நான் எடுத்துரைத்திருந்தேன். அதிலுள்ள தவறை நான் உணர்ந்திருந்தபோதிலும் ஆதாரங்களை அனுப்பியவர்களிடம் நான் அதை குறிப்பிடவில்லை. ஆனால் ஆய்வுத் துறையில் பணி செய்யக் கூடியவர்களுக்கு சுயமே தவறுக்கான உணர்வு ஏற்பட்டது. அவர்கள் இந்த திருத்தத்தை அனுப்பியுள்ளனர். இதன் மூலமாக எப்படியோ என்னிடம் இருந்த தவறான புரிதல் அகன்று விட்டது. மாஷா அல்லாஹ்.

அவர்கள் சுயமே கடுமையாக உழைத்து பணி செய்து இந்த ஆதாரங்களை தேடி எடுக்கின்றனர். ஆனால் சில முறை அவசரத்தில் இதுபோன்ற வாக்கியங்களை கடந்து விடுகின்றோம். அது இரண்டு சஹாபாக்களுடைய சம்பவங்களுடன் ஒன்றுபட்டதாக இருக்கின்றது. இதேபோன்று சில அரபி மொழி வாக்கியங்களின் மொழியாக்கத்திலும் சரியான சொற்களை தேர்ந்தெடுக்காத காரணத்தினால் உண்மையை விளங்க முடியாமல் இருந்தது. எவ்வாறிருப்பினும் இது தொடர்பாக ஆதாரத்தை திருத்தம் செய்து அவர்கள் சுயமே அனுப்பி வைத்து விட்டார்கள். அதனை நான் முதலில் எடுத்துரைப்பேன்.

டிசம்பர் மாதம் 27 ஆம் தேதி குத்பாவில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஅத் மற்றும் துலைப் பின் உமைர் ஆகியோருக்கிடையில் சகோதரத்துவத்தை நிலைநாட்டினார்கள் என்று ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களின் நற்குறிப்பில் எடுத்துக் கூறியிருந்தேன். இவர்கள் இருவரும் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனா வந்திருந்தார்கள்.

மேலும் இப்னு இஸ்ஹாக்கைப் பொறுத்தவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் சஅத் பின் உபாதா மற்றும் ஹஸ்ரத் அபூஸர் கஃப்ஃபாரி ஆகியோருக்கிடையே சகோதரத்துவ பந்தத்தை நிலைநாட்டினார்கள் என்று கூறுகின்றார்கள். ஆனால் சிலருக்கு இதிலும் கருத்து வேறுபாடு உள்ளது. வாகிதி அவர்கள் இதனை மறுத்துள்ளார்கள். ஏனென்றால் அவரைப் பொறுத்தவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்துகின்ற விஷயத்தை பத்ர் போருக்கு முன்பு சஹாபாக்களுக்கு மத்தியில் ஏற்படுத்தி இருந்தார்கள். ஹஸ்ரத் அபூஸர் கஃப்ஃபாரி அந்த நேரத்தில் மதீனாவிற்கு வந்திருக்கவில்லை. பத்ர், உஹது மற்றும் அகழ் போர்களில் அவர் பங்குபெறவில்லை. மாறாக, இந்தப் போர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வருகை தந்தார்கள் என்று நான் கூறியிருந்தேன். இது அவர்களின் ஆதாரமாகும்.

எவ்வாறிருப்பினும் இந்த சம்பவம் இவ்வாறு நடைபெறவில்லை. சகோதரத்துவ பந்தத்தின் இந்த குறிப்பு என்பது உண்மையில் ஹஸ்ரத் முன்ஸிர் பின் அம்ர் பின் ஹுனைஸ் அவர்கள் தொடர்புடையதாக இருந்தது.

(அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 258 முன்ஸிர் பின் அம்ர் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த சம்பவம் எந்தப் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டதோ அங்கு ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களைப் பற்றிய குறிப்பும் உள்ளது என்று ஆய்வுத் துறையைச் சார்ந்தவர்களே சுயமே எழுதியுள்ளார்கள். ஆனால் ஆய்வுத் துறை சார்பாக தவறுதலாக இந்த வாக்கியம் ஹஸ்ரத் சஅத் அவர்களுடன் சகோதரத்துவ பந்தம் ஏற்படுத்தப்பட்டதாக எழுதப்பட்டு விட்டது. ஆனால் ஹஸ்ரத் முன்ஸிர் பின் அம்ர் அவர்களின் குறிப்பில் சகோதரத்துவ பந்தம் இடம் பெற்றுள்ளது. நான் கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் ஜனவரி மாதம் 25 ஆம் தேதி குத்பாவில் இதனுடைய விளக்கத்தை எடுத்துரைத்திருக்கின்றேன். எவ்வாறிருப்பினும் இது ஓர் திருத்தமாகும்.

இதன் பிறகு இடம் பெற்றுள்ள குறிப்பு இவ்வாறாகும். அதாவது அகழ் போர் சம்பவம் நடந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயைனா பின் ஹஸனுக்கு மதீனாவின் ஒரு பகுதி பேரீத்தம் பழங்களை வழங்குவது பற்றி சிந்தித்தார்கள். அவருடன் இருந்த லத்ஃபான் கோத்திரத்தின் மக்களை திரும்ப பெற்றுக் கொண்டு மீதமுள்ள மக்களை விடுவித்து விட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் ஆலோசிக்கப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் மற்றும் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா ஆகியோரிடம் மட்டும் ஆலோசனை கேட்டார்கள்.

அப்போது அவர்கள் இருவரும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ்வின் புறமிருந்து உங்களுக்கு அப்படி ஒரு கட்டளை வந்திருந்தால் நீங்கள் அவ்வாறே செய்யுங்கள். அவ்வாறு இல்லையென்றால் பின்னர் இறைவன் மீது ஆணையாக! வாளைத் தவிர்த்து நாம் வேறு எதனையும் கொடுக்க மாட்டோம். அதாவது நாம் நமது உரிமையை பெற்றுக் கொள்வோம். அவர்களின் நயவஞ்சகம் அல்லது உடன்படிக்கையை பேணாததற்குரிய தண்டனை என்னவோ அது அவர்களுக்கு வழங்கப்படும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எனக்கு இறைவன் புறமிருந்து எந்த கட்டளையும் வரவில்லை. நான் எனது கருத்தையே உங்கள் முன்னால் எடுத்து வைத்தேன் என்று கூறினார்கள். அப்போது அந்த இரு சஹாபிகளும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அறியாமை காலத்தில் இவர்கள் எங்களிடம் இதுபோன்ற எந்த எதிர்பார்ப்பையும் வைக்காதபோது அல்லாஹ் உங்கள் மூலமாக எங்களுக்கு நேர்வழியை வழங்கியிருக்கின்ற நிலையில் இன்று எப்படி இந்த எதிர்பார்ப்பை வைக்க முடியும்? அதாவது ஏற்கனவே நடைமுறையில் இருந்து வருகின்ற சட்டத்தின்படியே இன்றும் அமல் செய்யப்படும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அந்த இருவரின் பதிலால் மகிழ்ச்சியடைந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 442 சஅத் பின் உபாதா – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் அகழ் போரின் சூழலைக் குறிப்பிட்ட பிறகு இது தொடர்பான விளக்கத்தை எடுத்துரைத்துள்ளார்கள்.

அந்த நாள் முஸ்லிம்களுக்கு மிகவும் துனபத்திற்குரிய மற்றும் கவலையளிக்கக்கூடிய அபாயகரமான நாளாக இருந்தது. அந்த முற்றுகையின் காலம் அதிகமாக அதிகமாக முஸ்லிம்களின் எதிர்க்கின்ற ஆற்றல் நிச்சயமாக பலவீனமாகிக் கொண்டே சென்றது. ஆயினும் அவர்களின் உள்ளத்தில் ஈமானும் கலப்பற்றத் தன்மையும் இருந்தது. ஆனால் உடல் பௌதீக சட்டத்தின் காரணிகளுக்குக் கீழ் இயங்கி வந்த காரணத்தால் உடல் பலவீனமாகிக் கொண்டே வந்தது. அதாவது உடலின் பல தேவைகள் உள்ளன.

உதாரணமாக, ஓய்வு, உணவு ஆகியவை உள்ளன. முற்றுகை நீண்டு கொண்டே சென்றதால் ஓய்வும் கிடைக்கவில்லை. சரியான முறையில் உணவும் கிடைக்கவில்லை. எனவே சோர்வும், பலவீனமும் உருவாகிக் கொண்டிருந்தது. இது உடலின் இயற்கை விளைவாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த சூழலைக் கண்டார்கள். எனவே அன்னார் (ஸல்) அவர்கள் அன்ஸார்களின் தலைவர்களான, ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் மற்றும் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களை அழைத்து அவர்களிடம் சூழலை எடுத்துரைத்து முஸ்லிம்கள் மற்றும் ஏழைகளின் நிலை இவ்வாறு ஆகிக் கொண்டிருக்கிறது. இது போன்ற சூழலில் நாம் என்ன செய்ய வேண்டும்? என்று ஆலோசனை கேட்டார்கள். அத்துடன் நீங்கள் விரும்பினால் கத்ஃபான் கோத்திரத்திற்கு மதீனாவின் விளைச்சலில் கொஞ்சம் பங்கை கொடுத்து இந்தப் போரை தவிர்த்து விட முடியும் என்ற தனது கருத்தையும் கூறினார்கள்.

சஅத் பின் மஆஸ் மற்றும் சஅத் பின் உதாபா ஆகிய இருவரும் ஒருமித்த குரலில் கூறினார்கள். அதாவது அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களுக்கு இது தொடர்பாக ஏதாவது வஹீ வந்துள்ளது என்றால் நாங்கள் உங்களது இந்த கூற்றை அப்படியே ஏற்றுக் கொள்வோம். அந்நிலையில் தாங்கள் நிச்சயமாக இந்த கருத்தின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளுங்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இந்த விவகாரத்தில் எனக்கு எந்த வஹீயும் இறங்கவில்லை. நான் உங்களது துன்பங்களைக் கண்டு ஆலோசனை கேட்டேன் என்று கூறினார்கள்.

அப்போது அந்த இரு சஹாபிகளும் இவ்வாறு பதிலளித்தார்கள். அப்படியென்றால் எங்களது ஆலோசனை இதுவாகும். அதாவது நாங்கள் ஷிர்க்கின் நிலையில் ஒருபோதும் எந்த எதிரிக்கும் எதையும் கொடுத்திருக்கவில்லை. தற்போது நாங்கள் முஸ்லிமாக ஆகிவிட்ட பிறகு இப்போது அது எப்படி அது சாத்தியமாகும்? அதாவது அவர்களின் சட்டம் என்னவோ அந்த சட்டத்திற்கேற்பவே தற்போதும் அமல் செய்யப்பட வேண்டும் என்று கூறினார்கள்.

மேலும் அல்லாஹ்வின் மீது ஆணையாக! வாளைத் தவிர்த்து வேறு எதனையும் நாம் அவர்களுக்கு வழங்க மாட்டோம் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அன்ஸார்களின் காரணமாகவே கவலை ஏற்பட்டிருந்தது. மற்ற மக்களும் அங்கு வசித்து வந்தார்கள். மதீனாவின் அன்ஸார்களுக்கு நீண்ட கால முற்றுகையின் காரணமாக ஏதேனும் ஆட்சேபணையோ அல்லது மாற்றுக் கருத்தோ, நிம்மதியின்மையோ ஏற்பட்டு விடக்கூடாது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கவலை கொண்டார்கள். ஏனென்றால் அன்ஸார்கள்தான் மதீனாவின் அசல் குடிமக்களாக இருந்தார்கள். அன்ஸார்களின் மன நிலையை கண்டறிவதே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அசல் நோக்கமாக இருந்தது. அவர்கள் இந்த துன்பங்களால்

## திருக்குர்ஆனிலிருந்து...

நிராகரித்து அல்லாஹ்வின் வழியிலிருந்து (மக்களைத்) தடுக்கின்றவர்கள், நிச்சயமாக வழிதவறி நெருடுந் தொலைவில் சென்றுவிட்டவர்கள் ஆவர். (4:168)

Faizal Hameed Ilahi, Tittacherry

கஷ்டத்திற்குள்ளாகி இருக்கின்றார்களா? என்பதை அன்னார் அறிந்து கொள்ள விரும்பினார்கள்.

ஒருவேளை அவர்கள் கஷ்டத்திற்குள்ளாகி இருந்தால் அவர்களுக்கு ஆறுதல் வழங்க வேண்டும் என்பதற்காக அவர்களிடம் இந்த ஆலோசனையை மேற்கொண்டார்கள். எனவே முழுமையான மகிழ்ச்சியுடன் அன்ஸார்களின் அந்த ஆலோசனைகளை அப்படியே ஏற்றுக் கொண்டார்கள். மேலும் போரையும் தொடர்ந்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 589,590)

அகழ் போரின் சூழலை எடுத்துரைத்தவாறு சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற புத்தகத்தில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

அபூ சுஃப்யான் இந்த திட்டத்தை தீட்டினார். பனூ நஸீர் கோத்திரத்தின் யூத தலைவர் ஹய் பின் அக்தம் ஒரு வழிகாட்டலை வழங்கினான். அதாவது இரவின் இருளின் திரையில் பனூ குரைலாவின் கோட்டையை நோக்கி செல்லுங்கள் என்றும் அங்கு சென்று அவர்களின் தலைவரான கஅப் பின் அஸதுடன் இணைந்து பனூ குரைலாவை தம்முடன் இணைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்யுங்கள் என்றும் வழிகாட்டினான்.

ஆக ஹப் பின் அக்தப் சந்தர்ப்பத்தை தேடி கஅப் அவர்களின் வீட்டை சென்றடைந்தான். தொடக்கத்தில் கஅப் அவர்களின் பேச்சை கேட்ட மறுத்து விட்டார். மேலும் முஹம்மது (ஸல்) அவர்களுடன் நாங்கள் உடன்படிக்கை செய்திருக்கின்றோம். முஹம்மது (ஸல்) அவர்கள் எப்போதும் தமது உடன்படிக்கையை நன்றியுணர்வுடன் பேணி வந்துள்ளார்கள். எனவே எங்களால் அவர்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்ய முடியாது என்று கூறினார். ஆனால் ஹய் என்பவர் பசுமையான தோட்டங்களை அவருக்கு காட்டினார். மேலும் இஸ்லாம் மிக விரைவாக அழிந்து விடும் என்ற நம்பிக்கையையும் அவருக்கு ஊட்டினார். மேலும் இஸ்லாத்தை அழிக்காத வரை ஒருபோதும் மதீனாவிலிருந்து திரும்பிச் செல்ல மாட்டோம் என்ற தனது உறுதிமொழியையும் எடுத்துரைத்தார்.

இந்த அளவிற்கு பிடிவாதமாக தொடர்ந்து கூறப்பட்டதால் கடைசியில் அவரும் அதை ஏற்றுக் கொண்டு விட்டார். இவ்வாறாக, பனூ குரைலாவின் வலிமையின் எடையும் எதிரிகளோடு இணைந்து கொண்டது. எவர் தம்முடன் இணைத்துக் கொள்ள வந்தாரோ அவருடன் இவர்கள் இணைந்து கொண்டார்கள். மேலும் அந்த மக்கள் ஏற்கனவே ஒரு பக்கமாக சாய்ந்திருந்தார்கள். உலகியல் ஆற்றல்கள் ஏற்கனவே அவர்களிடம் அதிகமாக இருந்தன.

பனூ குரைலாவின் இந்த அபாயகரமான நம்பிக்கை துரோகம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்ததும், மூன்று முறை இரகசியமாக ஸுபைர் பின் அல் அவாம் அவர்களை நிலவரத்தை அறிந்து வருவதற்காக பனூ குரைலாவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். பின்னர் முறையாக அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவர்களான சஅத் பின் மஆஸ் மற்றும் சஅத் பின் உபாதா ஆகியோரையும், தாக்கமுடைய வேறு சில சஹாபாக்களையும் ஒரு குழுவாக பனூ குரைலாவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். மேலும் எதுவும் அச்சத்திற்குரிய செய்தி என்றால் அதனை திரும்பி வந்து பகிரங்கமாக கூறக்கூடாது. மாறாக, பொறுமையை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் பொது மக்களிடையே பதற்றம் ஏற்படாமல் இருக்கும் என்று அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழிகாட்டினார்கள்.

இந்த மக்கள் பனூ குரைலாவின் தங்குமிடத்தை அடைந்தார்கள். மேலும் அவர்களின் தலைவரான கஅப் பின் அஸத் அவர்களிடம் சென்றார்கள். அப்போது அந்த துர்பாக்கியசாலி மிகவும் ஆணவத்துடன் அவர்களுடன் நடந்து கொண்டான். மேலும் இரண்டு சஅத் அவர்களிடமும், செல்லுங்கள். முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் எங்களுக்கும் இடையில் எந்த உடன்படிக்கையும் இல்லை என்று கூறுங்கள் என்று அறிவித்தார். இந்த சொற்களைக் கேட்டதும் அங்கு சென்றிருந்த சஹாபாக்களின் குழு உடனே எழுந்து வந்து விட்டது. மேலும் சஅத் பின் மஆஸ் மற்றும் சஅத் பின் உபாதா ஆகியோர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்து உரிய வழிமுறையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நிலவரத்தைப் பற்றிய தகவல்களை வழங்கினார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 584,585)

எவ்வாறிருப்பினும் அவர்களுடன் தொடர வேண்டிய போர் அல்லது கிடைக்க வேண்டிய தண்டனை கிடைத்துக் கொண்டிருந்தது. பனூ குரைலாவுடனான போரின் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்கள் பல ஒட்டங்களில் பேரீத்தம் பழங்களை ஏற்றி அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காகவும், முஸ்லிம்களுக்காகவும் அனுப்பி வைத்தார்கள். அதுவே அவர்கள் அனைவரின் உணவாக இருந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பேரீத்தம் பழம் எவ்வளவு சிறந்த உணவாகும் என்று கூறினார்கள்.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 5 பக்கம் 06 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு ஜமாதியுல் ஊலா மாதத்தில் மூத்தா போர் நடந்தது. அதில் ஹஸ்ரத் ஸைது அவர்கள் ஷஹீதாகி இருந்தார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அன்னாரின் குடும்பத்திற்கு இரங்கல் தெரிவிப்பதற்காக அவர்களின் வீட்டிற்குச் சென்றார்கள். அப்போது அவர்களின் மகள், ஏக்கம் மற்றும் துன்பத்தின் காரணமாக அழுது கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்களும் மிக அதிகமாக அழுதார்கள். அதைக் கண்ட ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இது என்ன? என்று கேட்டார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹாதா ஷவ்க்குல் ஹபீப் இலல் ஹபீப் அதாவது இது ஒரு நேசத்திற்குரியவர் தனது மற்றொரு நேசத்திற்குரியவர் மீது கொண்ட அன்பின் வெளிப்பாடாகும் என்று கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 34 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சஹீஹ் புகாரியில் ஓர் அறிவிப்பு உள்ளது. அதாவது ஹிஷாம் பின் உர்வா தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கள் வெற்றி கொள்ளப்பட்ட உடன்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நிராகரித்ததுடன் அநீதியும் இழைத்தவர்களை அல்லாஹ் ஒருபோதும் மன்னிக்க மாட்டான். அவர்களுக்கு எந்த வழியையும் காட்ட மாட்டான். (4:169)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

மக்காவிற்கு சென்றார்கள். அப்போது அந்த தகவல் குரைஷிகளுக்கு கிடைத்தது. அபூ சுஃப்ஹான் பின் ஹர்ப், ஹகிம் பின் ஹர்ம் மற்றும் ஹக்கீம் பின் ஹஸ்ஸாம், பரீ பின் பர்கா ஆகியோர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தேடிக் கொண்டிருந்தனர். இங்கும் அங்கும் சுற்றித் திரிந்தனர். இறுதியாக நிஸாருஸ் ஸஸ்ரான் என்ற இடத்தை அடைந்தார்கள். நிஸாருஸ் ஸஹ்ரான் என்ற இடத்தை அடைந்தபோது அங்கு ஏராளமான நீரூற்றுகளும் பேரீத்தம் பழ தோட்டங்களும் இருந்தன. அது மக்காவிலிருந்து ஐந்து மைல் தொலைவிலேயே இருந்தது.

எவ்வாறிருப்பினும் அங்கு சென்றடைந்தபோது ஏராளமான நெருப்புகள் மூட்டப்பட்டு ஒளிமயமாக இருப்பதை அவர் கண்டார். ஹஜ்ஜின் சந்தர்ப்பத்தின்போது அரஃபாத்தின் மைதானத்தில் நிலவும் சூழலைப் போன்று அவர் உணர்ந்தார். அபூ சுஃப்யான் இது என்ன? இது அரஃபாத்தின் நெருப்பு போன்று அல்லவா தோன்றுகிறது என்று கூறினார்.

பதீல் பின் வர்கா கூறினார்: இது பனூ அம்ர் கோத்திரத்தின் நெருப்பாக தோன்றுகிறது. அதாவது கஸாஆ கோத்திரத்தின் நெருப்பை போன்று தோன்றுகிறது என்று கூறினார். அபூ சுஃப்யான் கூறினார்: அம்ரின் கோத்திரம் இந்த எண்ணிக்கையை விட குறைவானதாகும். அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதுகாவலர்களில் சில மக்கள் கண்டு விட்டனர். அவர்களை அந்த மூவரையும் கைது செய்தனர். பின்னர் அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வந்தார்கள். அபூ சுஃப்யான் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சென்ற பிறகு அன்னார் ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களிடம் கூறினார்கள். அபூ சுஃப்யானை மலைக்கு அருகே தடுத்து நிறுத்தி வையுங்கள். ஏனெனில் அவர் முஸ்லிம்களை காண வேண்டும். எனவே ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களும் அவ்வாறே தடுத்து நிறுத்தினார்கள்.

பல்வேறு கோத்திரங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கடந்து சென்றது. படையின் ஒவ்வொரு அணியும் அபூ சுஃப்யானுக்கு முன்னால் கடந்து சென்றது. ஒவ்வொரு அணியும் கடந்து செல்லும்போது அபூ சுஃப்யான் ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களிடம் இது யார் என்று கேட்பார். அதற்கு அப்பாஸ் அவர்கள் இது கஃப்பார் கோத்திரத்தின் மக்கள் ஆவர் என்று கூறினார்கள். அதற்கு அபூ சுஃப்யான் எனக்கு கஃப்பார் கோத்திரத்துடன் எந்த தொடர்பும் இல்லை என்று கூறினார்.

பிறகு ஜஹீனா கோத்திரத்தின் மக்கள் கடந்து சென்றனர். அபூ சுஃப்யான் முன்பு கேட்டது போன்றே கேட்டார். அடுத்து சஅத் பின் அஸீம் மக்கள் கடந்து சென்றனர். அப்போதும் அவர் அவ்வாறே கூறினார். பிறகு சலீம் கோத்திரத்தார் கடந்து சென்றனர். பின்னர் அவர் அவ்வாறே கூறினார். எந்த அளவுக்கு என்றால் இறுதியில் ஒரு படை வந்தது. அதுபோன்ற படையை ஒருபோதும் அவர் கண்டதில்லை. அப்போது, இவர்கள் யார் என்று அபூ சுஃபயான் கேட்டார். அதற்கு அப்பாஸ் அவர்கள் இவர்கள் அன்ஸார் என்றும் இவர்களின் தலைவர் சஅத் பின் உபாதா ஆவார் என்றும் கூறினார்கள். அன்னாரிடம்தான் கொடியும் இருந்தது.

ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்கள் அபூ சுஃப்யானை சப்தமாக அழைத்து, அபு சுஃப்யானே! இன்றைய நாள் கடுமையான போருக்கான நாளாகும். இன்று கஃபாவில் போர் புரிவது ஆகுமானதாக இருக்கும் என்று கூறினார்கள்.

அபூ சுஃப்யான் இதை செவியுற்று, அப்பாஸே! போருக்கான சந்தர்ப்பம் கிடைத்தால் இந்த நாள் வீரத்திற்கு மிகச் சிறந்த நாளாக இருக்கும். அதாவது நான் மற்றொரு பக்கம் சென்று விட்டால் அல்லது அந்தப் பக்கத்திலிருந்து போர் புரிவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தால் சிறந்ததாக இருக்கும் என்று கூறினார். ஏனென்றல் அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்.

அடுத்து மற்றும் ஒரு படை பிரிவு வந்தது. அது அனைத்து படைகளையும் விட சிறியதாக இருந்தது. அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இருந்தார்கள். அன்னார்களின் தோழர்களாக முஹாஜிரீன்கள் இருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடி ஹஸ்ரத் ஸுபைர் பின் அவாம் அவர்களிடத்தில் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூ சுஃப்யானை கடந்து சென்றபோது சஅத் பின் உபாதா என்ன கூறினார் என்று உங்களுக்குத் தெரியாதா என்று கேட்டார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர் என்ன கூறினார் என்று கேட்டார்கள். அதற்கு அவர் இவ்வாறு கூறினார் என்று அபூ சுஃப்யான் கூறினார். அன்னார் என்ன சொற்களை பயன்படுத்தினார்களோ அது சரியானவை அல்ல என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மாறாக, இந்த நாள் எப்படிப்பட்ட நாள் என்றால், இதில் அல்லாஹ் கஃபாவின் மகத்துவத்தை நிலைநாட்டுவான். எந்தப் போரும் சண்டையும் நடைபெறாது என்று கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மகாஸி... ஹதீஸ் எண் 4280)

இந்த சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சற்று விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்கள். அது இவ்வாறாகும். படை மக்காவை நோக்கி முன்னேறியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களுக்கு இவ்வாறு கட்டளையிட்டார்கள். நீங்கள் அபூ சுஃப்யான் மற்றும் அவரது தோழர்களை படை செல்கின்றபோது சாலையின் ஒரு மூலையில் கொண்டு வந்து நிறுத்துங்கள். அவர் இஸ்லாமிய படை மற்றும் அர்ப்பணிப்பு உணர்வை காண வேண்டும் என கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களும் அவ்வாறே செய்தார்கள். அபூ சுஃப்யான் மற்றும் அவரது தோழர்களுக்கு முன்பு ஒன்றன் பின் ஒன்றாக அரபின் பல்வேறு கோத்திரங்கள் கடந்து செல்லத் துவங்கினர். அந்த கோத்திரத்தார் மக்கத்துவாசிகளுக்கு உதவி செய்வர் என்று அவர்கள் நம்பிக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் அனைவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சேர்ந்திருந்தார்கள். இன்று அவர்கள் நிராகரிப்பின் கொடியை பறக்க விடவில்லை.

மாறாக, அந்த கோத்திரத்தார் இன்று இஸ்லாத்தின் கொடியை பறக்க விட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களின் நாவு வல்லமைமிக்க இறைவனின் ஏகத்தவத்தின் அறிவிப்பு செய்து கொண்டிருந்தது. அவர்கள் முஹம்மது (ஸல்) அவர்களின்

## திருக்குர்ஆனிலிருந்து...

மனிதர்களே! இத்தூதர் உங்களிடம் உங்கள் இறைவன் புறமிருந்து வந்துள்ளார். எனவே நீங்கள் நம்பிக்கை கொள்ளுங்கள். (இது) உங்களுக்கு மிக நல்லது. நீங்கள் நிராகரிப்பீர்களாயின், வானங்களிலும், பூமியிலுமுள்ளவையெல்லாம் நிச்சயமாக அல்லாஹ்விற்குரியவையே (என்பதை நினைவில் கொள்ளுங்கள்). அல்லாஹ் நன்கு அறிபவனும் நுண்ணிய ஞானமுள்ளவனுமாவான். (4:171)

A.Basheer Ahmad, Melapalayam

பாதுகாவலர்களாக முன்னேறிக் கொண்டிருந்தார்கள். மக்கத்துவாசிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கடைசி சொட்டு ரத்தம் சிந்தப்படும் வரை நாங்கள் எல்லா விதமான தியாகத்தையும் செய்வோம் என்று அவர்கள் நம்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இவர்களின் உச்சபட்ச ஆசை என்னவாக இருந்தது என்றால், ஏக இறைவனின் ஏகத்துவத்தை உலகத்தில் நிலைநாட்ட வேண்டும் என்பதாகவே இருந்தது.

படைக்கு பின் படை ஒன்றன் பின் ஒன்றாக கடந்து கொண்டே சென்றது. இந்நிலையில் அஷ்ஜஆ கோத்திரத்தின் படை இஸ்லாத்தின் மீதான அன்பிலும், இஸ்லாத்திற்காக தியாகம் செய்கின்ற உணர்விலும் கடந்து சென்றது. இந்த உணர்வு அவர்களின் முகங்களில் வெளிப்பட்டிருந்தது. மேலும் அவர்களின் முழக்கங்களிலிருந்தும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. அப்போது அபூ சுஃப்யான், அப்பாஸே! இவர்கள் யார்? என்று கேட்டார்கள். அதற்கு அப்பாஸ் அவர்கள், இவர்கள் அஷ்ஜஆ கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறினார்கள்.

அபூ சுஃப்யான் மிகவும் ஆச்சரியத்துடன் அப்பாஸ் அவர்களின் முகத்தைப் பார்த்தார். மேலும் கூறினார்: முழு அரபு நாடுகளிலும் இவர்களை விட முஹம்மது (ஸல்) அவர்களுக்கு பெரிய எதிரி யாரும் இருந்ததில்லை என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள், இது இறைவனின் அருளாகும் என்று கூறினார்கள். அவன் நாடியவர்களுக்கு அதை வழங்குகின்றான். எனவே இவர்களது உள்ளங்களின் இஸ்லாத்தின் மீதான அன்பு நுழைந்து விட்டது என்று கூறினார்கள். இறுதியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஹாஜிரீன்கள் மற்றும் அன்ஸார்களின் படையை கடந்து சென்றார்கள். இவர்கள் 2000 நபர்களாக இருந்தார்கள்.

ஹஸ்ரத் இம்ரான் அவர்கள் அவர்களின் படையின் அணியை சரி செய்து கொண்டே சென்றார்கள். மேலும் கால்களை கவனமாக எடுத்து வையுங்கள் என்று கூறிக்கொண்டே சென்றார்கள். ஏனெனில் சஃப்களில் இடைவெளி ஏற்பட்டு விடக்கூடாது என்று கூறினார்கள்.

அபூ சுஃப்யான் அவர்களைக் கண்டு அவரது உள்ளத்தில் நடுக்கம் ஏற்பட்டது. மேலும் அபூ சுஃப்யான் ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களிடம், இவர்கள் யார்? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்ஸார் மற்றும் முஹாஜிரீன்களின் படையுடன் நடந்து சென்று கொண்டிருக்கின்றார்கள் என்று கூறினார்கள்.

இந்தப் படையை எதிர்கொள்வதற்கு உலகில் எவருக்கு ஆற்றல் உள்ளது? என்று அபூ சுஃப்யான் கேட்டார். பின்னர் அவர் ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களை நோக்கி, அப்பாஸே! உமது சகோதரரின் மகன் இன்று உலகில் மாபெரும் அரசராகி விட்டார் என்று கூறினார். அதற்கு அப்பாஸ் அவர்கள், இப்போதும் உமது உள்ளத்தின் கண்கள் திறக்கவில்லையா? என்று கேட்டார்கள். இது அரசாட்சி அல்ல; இது நபித்துவமாகும் என்று கூறினார்கள். அதற்கு அபூ சுஃப்யான், ஆம்! சரிதான். இது நபித்துவமாகவே இருக்கட்டும் என்று கூறினார்.

இஸ்லாமிய படை அபூ சுஃப்யானுக்கு முன்னால் கடந்து சென்று கொண்டிருந்தபோது அன்ஸார் படையின் போர் தளபதியான சஅத் பின் உபாதா அபூ சுஃப்யானைப் பார்த்து, இறைவன் வாளுடன் இன்று மக்காவில் நுழைவதை எங்களுக்கு ஹலாலாக ஆக்கி விட்டான் என்றும் இன்று குரைஷிய சமுதாயம் இழிவிற்குள்ளாக்கப்படும் என்றும் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூ சுஃப்யானை கடந்து சென்றபோது உரத்த குரலில், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இன்று நீங்கள் உங்களது சமுதாயத்தை கொலை செய்வதற்கு அனுமதி வழங்கி விட்டீர்களா? என்று கேட்டார்கள். இப்போதுதான் அன்ஸார் கோத்திரத்தின் தலைவரான சஅத் பின் உபாதா மற்றும் அவர்களின் தோழர்களும் இவ்வாறு கூறிக் கொண்டிருந்தனர் என்று கூறினார்.

இன்று போர் நடைபெறும் என்றும், மக்காவின் புனிதத்தன்மை இன்று எங்களை போர் புரிவதிலிருந்து விலக்கி வைக்க முடியாது என்றும் குரைஷிகள் எங்களை இழிவிற்குள்ளாக்க முடியாது என்றும் கூறினார். அதற்கு அவர் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்களே இன்று உலகில் எல்லோரையும் விட மிக அதிகமாக நல்லவராகவும், கருணையாளராகவும், மிக அதிகமாக உறவுகளை பேணக் கூடியவராகவும் இருக்கின்றீர்கள். அவ்வாறிருக்க நீங்கள் இன்று உங்களது சமுதாயத்தின் அநீதிகளை மறந்து விட மாட்டீர்களா? என்று கேட்டார்.

அபூ சுஃப்யானின் இந்த புகாரையும், முறையீட்டையும் கேட்டு விட்டு மக்காவின் வீதிகளில் இழுத்துச் செல்லப்பட்டு அடிக்கப்பட்ட மற்றும் தனது வீடுகளையும் சொத்துக்களையும் இழந்த முஹாஜிரீன்களும் துடித்து விட்டனர். அவர்களின் உள்ளங்களிலும் மக்கத்துவாசிகளுக்கு கருணை உருவானது. அவர்களும், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அன்ஸார்கள் மக்கத்து மக்களின் அநீதிகளைப் பற்றிய சம்பவங்களை செவிமடுத்துள்ளனர். அதன் காரணமாக இன்று அவர்கள் குரைஷிகளுடன் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பதை நாம் அறிவோம் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூ சுஃப்யானே! சஅத் அவர்கள் தவறாக கூறியுள்ளார்கள். இன்று கருணைக்குரிய நாளாகும். இன்றைய நாளில் அல்லாஹ் குரைஷிகளுக்கும் கஃபாவிற்கும் கண்ணியம் வழங்குகின்ற நாளாகும். பின்னர் அன்னார் ஒரு நபரை சஅத் அவர்களை நோக்கி அனுப்பினார்கள். மேலும் தனது கொடியை தனது மகனான கைஸ் அவர்களிடம் கொடுத்து விடுமாறும் அவர் உங்களது இடத்தில் அன்ஸார் படையின் தளபதியாக இருப்பார் என்றும் கூறினார்கள்.

இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அக்கொடியை அவரிடமிருந்து பெற்று விட்டார்கள். மேலும் அன்னாரது மகனுக்கு கொடுத்து விட்டார்கள். இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கத்துவாசிகளின் உள்ளங்களையும் பறித்து விட்டார்கள். மேலும் அன்ஸார்களின் உள்ளங்களையும் துன்பத்திலிருந்து பாதுகாத்து விட்டார்கள். சஅத் அவர்களின் மகனான கைஸ் அவர்களின் மீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முழுமையான நம்பிக்கை இருந்தது. ஏனென்றால் கைஸ் அவர்கள் மிகவும் நல்லியல்பு கொண்டவராகவும், கண்ணியமிக்க இளைஞராகவும் இருந்தார்கள். அவர்கள்

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக மர்யமின் மகன் ஈஸா மஸீஹ் அல்லாஹ்வின் (ஒரு) தூதரும், அவன் மர்யமுக்கு அருளிய ஒரு நற்செய்தியுமாகும். மேலும் அவனிடமிருந்துள்ள ஓர் அருளுமாகும். எனவே நீங்கள் அல்லாஹ்விடத்தும், அவனுடைய எல்லாத் தூதர்களிடத்தும் நம்பிக்கை கொள்ளுங்கள். (கடவுள்) மூன்று எனக் கூறாதீர்கள். (அவ்வாறு கூறுவதிலிருந்து) விலகிக் கொள்ளுங்கள். இது உங்களுக்கு நல்லது. நிச்சயமாக வணக்கத்திற்குரிய ஒருவன் அல்லாஹ் மட்டுமே. அவனுக்கு மகன் உண்டு என்பது அவனது தூய்மைக்கு அப்பாற்பட்டதாகும். (4:172)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

எப்படிப்பட்ட கண்ணியமிக்கவராக இருந்தார்கள் என்றால், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அன்னாரது கண்ணியத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறியுள்ளார்கள்:

வரலாற்றில் வருகிறது. அவர்களது மரணம் சமீபமாக இருந்தபோது அன்னாரின் நலம் விசாரிக்க அன்னாரிடம் சிலர் சென்றார்கள். சிலர் செல்லவில்லை. அப்போது எனது நண்பர்கள் சிலர் வந்துள்ளார்கள். சிலர் வரவில்லையே என்று கேட்டார்கள். அப்போது அவர்களின் நண்பர்கள் கூறினார்கள். நீங்கள் மிகவும் நல்ல மனிதராவீர்கள். மிகவும் வள்ளல் தன்மை கொண்டவர்கள் ஆவீர்கள். மக்களுக்கு பெரும் பெரும் உதவிகளை செய்துள்ளீர்கள். நீங்கள் ஒவ்வொரு நபருக்கும் அவரது துன்பத்தின் நேரத்தின்போது கடன் வழங்கி வந்துள்ளீர்கள். ஒருவர் கடன் கேட்டால் அவருக்கு கடன் கொடுத்துள்ளீர்கள். நகரத்தின் ஏராளமான மக்கள் உங்களின் கடனாளியாக இருக்கின்றார்கள். உங்களை நலம் விசாரிக்க வந்தால் நீங்கள் அவர்களிடம் அவர்களுக்கு கடனாக கொடுத்த பணத்தை திருப்பிக் கேட்டு விடுவீர்களோ? என்ற எண்ணத்தில் கூட சிலர் வரவில்லை என்று கூறினார்கள்.

அதற்கு அன்னார் மிகவும் வேதனையை வெளிப்படுத்தியவாறு எனது நண்பர்களுக்கு தேவையில்லாமல் இந்த துன்பம் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு இந்த எண்ணம் இருக்குமெனறால் நீங்கள் என் சார்பாக முழு நகரத்திலும் அறிவிப்புச் செய்து விடுங்கள். கைஸிற்கு கடன் பட்ட ஒவ்வொருவரின் கடனையும் கைஸ் தள்ளுபடி செய்து விட்டார் என்று அறிவித்து விடுங்கள் என்று கூறினார்கள். இந்த அறிவிப்பிற்குப் பிறகு அன்னாரை நலம் விசாரிக்க எந்த அளவுக்கு மக்கள் கூட்டம் வந்தது என்றால் அவர்களின் வீட்டின் ஏணிப்படிகள் இடிந்து விழுந்து விட்டதாக கூறுகின்றார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 341–343)

ஹுனைன் போர் ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு மக்கா வெற்றிக்குப் பிறகு நடைபெற்றது. ஹுனைன் போரின் மற்றொரு பெயர் ஹவாஸுன் போர் ஆகும். ஹுனைன் என்ற இடம் மக்காவிற்கும் தாயிஃப் நகரத்திற்கும் இடையில் மக்காவிலிருந்து முப்பது மைல் தொலைவில் அமைந்துள்ள ஊராகும். இந்தப் போரின் மூலம் கிடைத்த செல்வங்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஹாஜிரீன்களுக்கு பங்கிட்டு கொடுத்து விட்டார்கள். இது தொடர்பாக அன்ஸார்கள் தமது உள்ளங்களில் சற்று வேதனையை உணர்ந்தார்கள். இது தொடர்பாக ஒரு நீண்ட அறிவிப்பு முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் என்ற நூலில் இவ்வாறு இடம் பெற்றுள்ளது.

ஹஸ்ரத் அபூ சயீத் குத்ரீ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குரைஷிகள் மற்றும் இதர கோத்திரங்களுக்கு செல்வங்களை பங்கிட்டுக் கொடுத்தார்கள். அப்போது அன்ஸார்களுக்கு அவர்களின் பங்காக எதுவும் கிடைக்கவில்லை. அன்ஸார்கள் இதனை உணர்ந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் இது தொடர்பாக சர்ச்சை உருவானது. எந்த அளவுக்கு என்றால் அவர்களில் ஒருவர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது சமுதாயத்துடன் சேர்ந்து கொண்டார்கள். நம்மை மறந்து விட்டார்கள். முஹாஜிரீன்களுக்கு கொடுத்து விட்டார்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இந்த கோத்திரம் உங்களைக் குறித்து தமது உள்ளங்களில் இவ்வாறு உணர்கின்றனர் என்று கூறினார்கள். அதாவது அன்ஸார்கள் தாங்கள் தங்களது சமுதாயத்திற்கும் ஏனைய அரபு கோத்திரத்திற்கு மட்டும் செல்வத்தை பங்கிட்டு கொடுத்து விட்டீர்கள். அன்ஸார்களுக்கு அதிலிருந்து எதுவும் கிடைக்கவில்லை என்று அவர்கள் உணர்கின்றார்கள் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், சஅதே! இந்த விவகாரத்தில் நீங்கள் எந்தப் பக்கம் இருக்கின்றீர்கள்? நீர் உமது நிலைபாட்டை கூறவும் என்று கூறினார்கள். அதற்கு சஅத் அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் எனது சமுதாயத்தின் ஒரு உறுப்பினர் மட்டுமே ஆவேன். எனக்கு என்ன அந்தஸ்து உள்ளது? என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் உங்களது சமுதாயத்தை இந்த திறந்த வெளியில் ஒன்று கூட்டுங்கள். அதாவது அங்குள்ள ஒரு திறந்த வெளிக்கு அவர்களை அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள்.

எனவே ஹஸ்ரத் சஅத் அவர்கள் சென்றார்கள். அன்ஸார்களை அந்த மைதானத்தில் ஒன்று கூட்டினார்கள். சில முஹாஜிரீன்களும் அங்கு வந்தார்கள். ஹஸ்ரத் சஅத் அவர்களும் அவர்களில் சிலரை உள்ளே வர அனுமதி அளித்தார்கள். சிலர் உள்ளே வந்தனர். மேலும் அவர்களில் சிலரை ஹஸ்ரத் சஅத் அவர்கள் தடுத்து நிறுத்தினார்கள். அனைவரும் ஒன்று கூடி விட்ட பிறகு ஹஸ்ரத் சஅத் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்று அன்ஸார்கள் அனைவரும் ஒன்றுகூடி விட்டனர் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களிடத்தில் வருகை தந்ததாக அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதலில் அல்லாஹ்வை புகழ்ந்து பேசினார்கள். பின்னர் கூறினார்கள்: அன்ஸார்களின் கூட்டமே! உங்களைப் பற்றி எனக்கு கிடைத்திருக்கின்ற செய்தி என்ன? நீங்கள் உங்களுக்கு செல்வம் கிடைக்கவில்லை என்ற அதிருப்தியில் இருப்பதாக எனக்கு செய்தி கிடைத்துள்ளது. நான் உங்களிடத்தில் வந்தபோது நீங்கள் வழிகேட்டில் இருக்கவில்லையா? அல்லாஹ் உங்களுக்கு நேர்வழியை வழங்கினான். நீங்கள் அப்போது பொருளாதார கஷ்டத்திற்கு ஆளாகி இருக்கவில்லையா? அல்லாஹ் உங்களை செல்வந்தராக ஆக்கினான். நீங்கள் ஒருவர் மற்றவரின் எதிரியாக இருக்கவில்லையா? அல்லாஹ் உங்களது உள்ளங்களில் ஒருவர் மற்றவர் மீதான அன்பை ஏற்படுத்தினான். அதற்கு அவர்கள், ஏன் இல்லை. அல்லாஹ்வும் அவனது தூதரும் கருணை காட்டக்கூடியவரும், மேன்மையானவரும் ஆவார்கள் என்று கூறினர்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அன்ஸார்களின் கூட்டத்தினரே! எனது இந்த விஷயத்திற்கு நீங்கள் ஏன் பதிலளிப்பதில்லை? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் உங்களுக்கு என்ன பதிலளிப்பது? கருணையும், அருளும் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்குமே உரியதாக இருக்கிறது என்று கூறினர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்தவர்களுக்கு அவர்களின் நற்பலன்களை முழுமையாக வழங்குவதுடன் அவன் தனது அருளிலிருந்து அவர்களுக்கு மிகுதியாக வழங்குவான். ஆனால் அற்பமாக நினைக்கவும் பெருமை கொள்ளவும் செய்கின்றவர்களுக்கு அவன் வேதனையளிக்கக்கூடிய ஆக்கினையைக் கொடுப்பான். (4:174)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் விரும்பி இருந்தால் இவ்வாறும் கூறியிருக்க முடியும். உங்களது அந்த கூற்று உண்மையானதாகவும் இருந்திருக்கும். அதாவது நீங்கள் எங்களிடத்தில் உங்களது சமுதாயம் உங்களைப் பொய்ப்படுத்திய நிலையில் வந்தீர்கள். நாங்கள் உங்களை ஏற்றுக் கொண்டோம். உங்களை உங்களது உறவினர்களே கைவிட்டு விட்டார்கள். ஆனால் நாங்கள் உங்களுக்கு உதவி செய்தோம். உங்களை மக்கள் வெளியேற்றி விட்டார்கள். நாங்கள் உங்களுக்கு அடைக்கலம் வழங்கினோம் என்று நீங்கள் கூறியிருக்க முடியும்.

அன்ஸார்களின் கூட்டத்தினரே! நீங்கள் உலகத்தின் அர்ப்பமான செல்வத்திற்கு உங்களது உள்ளங்ளில் துன்பத்தை உணர்கின்றீர்களா? நான் உங்களுக்கு செல்வத்தை வழங்கவில்லை என்பதற்காக துன்பப்படுகின்றீர்களா? நான் சமுதாயங்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் அந்த சமுதாயத்தின் உள்ளங்களை ஈர்ப்பதற்காகவும் மேலும் அவர்கள் உறுதியுடன் இருப்பதற்காகவும் நான் அவர்களுக்கு செல்வத்தை வழங்கினேன். மேலும் உங்களை நான் இஸ்லாத்திடம் ஒப்படைத்து விட்டேன். மக்கள் ஆடு, மாடு, ஒட்டகங்களை கொண்டு செல்லும்போது நீங்கள் அல்லாஹ்வின் தூதரை உங்களது வீடுகளுக்கு கொண்டு செல்வதில் மகிழ்ச்சியடையவில்லையா?

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த இறைவனின் கையில் எனது உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! ஹிஜ்ரத் நடைபெறாமல் இருந்திருந்தால் நான் அன்ஸார்களின் ஒருவனாக இருந்திருப்பேன். மக்கள் ஒரு பள்ளத்தாக்கிலும், அன்ஸார்கள் மற்றொரு பள்ளத்தாக்கிலும் சென்று கொண்டிருக்கின்றார்கள் என்றால் நான் அன்ஸார்கள் சென்று கொண்டிருக்கின்ற அந்த பள்ளத்தாக்கையே என்னுடையதாக ஆக்கிக் கொள்வேன். அல்லாஹ்வே! அன்ஸார்கள் மீது கருணை செய்வாயாக. மேலும் அன்ஸார்களின் பிள்ளைகளின் மீதும் அன்ஸார்களின் பிள்ளைகளின் பிள்ளைகளின் மீதும் நீ கருணை செய்வாயாக.

அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்: இதைக்கேட்ட பின்னர் அங்கிருந்த அன்ஸார்கள் அனைவரும் அழுதனர். எந்த அளவுக்கு என்றால் அவர்களின் தாடி கண்ணீரால் நனைந்து விட்டது. மேலும் நாங்கள் ரஸூல் (ஸல்) அவர்களின் பங்கீட்டிலும், அவர்கள் கொடுத்த பங்கிலும் திருப்தி கொள்கின்றோம். தாங்கள் எவ்வாறு பங்கிட்டு கொடுத்தீர்களோ அதில் நாங்கள் திருப்தி கொள்கின்றோம். தாங்கள் எங்களுக்கு போதுமானவராவீர்கள் என்று அன்ஸார்கள் கூறினர். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கிருந்து சென்று விட்டார்கள். மக்களும் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

(அஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதி 3 பக்கம் 163,175 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 4 பக்கம் 192,193 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஜ்ஜத்துல் விதாவிற்காக மதீனாவிலிருந்து பயணம் செய்து ஹஜ்ஜிற்குரிய இடத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அடைந்தார்கள். அப்போது அங்கு அன்னாரின் சவாரி தொலைந்து போனது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் சவாரி ஒன்றாகவே இருந்தது. அது ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் அடிமையிடம் இருந்தது. இரவு நேரத்தில் அவரிடமிருந்து அந்த சவாரி தொலைந்து போனது. ஹஸ்ரத் சுஃப்பான் பின் முஅத்தல் பயணக் குழுவில் மிகவும் பின்தங்கி இருந்தார்கள். அவர்கள் தம்முடன் அந்த பெண் ஒட்டகத்தை அழைத்துக் கொண்டு வந்தார்கள். அனைத்து பொருட்களும் அதில் இருந்தன. அதாவது தொலைந்து போன அந்த ஒட்டகத்தை அவர்கள் அழைத்து வந்தார்கள். அதில் அனைத்து பொருட்களும் இருந்தன.

ஹஸ்ரத் சஅத் பின் உபாதா இந்த விஷயத்தைக் கேட்டதும் தனது மகன் கைஸ் அவர்களுடன் வந்தார்கள். அந்த இருவருடன் ஒரு ஒட்டகமும் இருந்தது. அதில் வழிப்பாதைக்கான உணவும் இருந்தது. பயணத்திற்கான அனைத்து பொருட்களும் அதில் கட்டப்பட்டிருந்தன. அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது வீட்டின் வாசல் அருகே நின்று கொண்டிருந்தார்கள். அப்போது அல்லாஹ், அன்னாருடைய பொருட்களை சுமந்து வந்த சவாரியை திரும்ப கிடைக்கச் செய்து விட்டான். அதாவது சஅத் அவர்கள் வருவதற்கு முன்னால் தொலைந்து போன அந்த ஒட்டகம் அன்னாருக்கு கிடைத்திருந்தது.

ஹஸ்ரத் சஅத் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! உங்களது சாமான்கள் ஏற்றப்பட்டிருந்த சவாரி தொலைந்து போனதை நாங்கள் அறிவோம். அதற்கு பகரமாக இதோ எங்களது சவாரி உள்ளது என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ் அந்த சவாரியை என்னிடத்தில் கொண்டு வந்து விட்டான். அதாவது தொலைந்து போன ஒட்டகம் எங்களுக்கு கிடைத்து விட்டது. நீங்கள் இருவரும் உங்களது சவாரியை கொண்டு செல்லுங்கள். அல்லாஹ் உங்கள் இருவர் மீதும் பரக்கத் செய்வானாக என்று கூறினார்கள்.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 8 பக்கம் 460 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & கிதாபுல் மகாஸி தொகுதி 3 பக்கம் 1093 – 1984 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எனது குழந்தை மரண தருவாயில் உள்ளது. தாங்கள் எங்களிடத்தில் வாருங்கள் என்ற செய்தியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அன்னாரின் மகள் கூறி அனுப்பினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அனைத்தும் அல்லாஹ்விற்கே உரியன. அவன் எதனை எடுத்துக் கொள்வானோ அது அவனுக்கே உரியதாகும். அவன் வழங்குவதும் அவனுக்கே உரியதாகும். அவனிடத்தில் ஒவ்வொன்றிற்கும் ஒரு நேரம் உள்ளது.

எனவே நீங்கள் பொறுமை செய்யுங்கள். அல்லாஹ்வின் திருப்தியின் மீது திருப்தி கொள்ளுங்கள் என்று கூறி அனுப்பி வைத்தார்கள். ஆனால் அன்னாரின் மகள் வருகை தரும்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மீண்டும் செய்தி அனுப்பினார்கள். தாங்கள் கண்டிப்பாக வர வேண்டும் என அவர்கள் சத்தியமும் செய்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

## திருக்குர்ஆனிலிருந்து...

மக்களே! உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்குத் தெளிவானதொரு சான்று வந்து விட்டது. மேலும் நான் உங்களுக்குத் தெளிவான ஓர் ஒளியினையும் இறக்கியுள்ளோம். எனவே அல்லாஹ்விடத்து நம்பிக்கை கொண்டவர்களை, நிச்சயமாக அவன் தன்னுடைய பெருங் கருணையிலும் பெரும் அருளிலும் நுழையச் செய்வான். மேலும் தன் பக்கம் வரக்கூடிய நேரான வழியினை அவர்களுக்குக் காட்டுவான். (4:175,4176)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

எழுந்தார்கள். அன்னாருடன் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா, ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல், ஹஸ்ரத் அபீ பின் கஅப், ஹஸ்ரத் ஸைத் பின் சாபித் மற்றும் இன்னும் பல நபர்கள் இருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வந்ததும் அன்னாரிடத்தில் குழந்தை கொண்டு வரப்பட்டது. அப்போது அந்த குழந்தை மரணித்துக் கொண்டிருந்தது. மரணிக்கின்ற சப்தம் வந்து கொண்டிருந்தது.

ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் உஸாமா அவர்கள், இரண்டு தண்ணீர் குடங்கள் மோதிக் கொண்டால் ஏற்படுகின்ற சப்தத்தைப் போன்ற சப்தம் வந்தது என்று கூறினார்கள். அதாவது நீண்ட மூச்சை குழந்தை வாங்கிக் கொண்டிருந்தது. குழந்தையின் இந்த நிலையைப் பார்த்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்ணீர் வடித்தார்கள்.

அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது என்ன? என்று ஹஸ்ரத் சஅத் அவர்கள் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இது கருணையாகும். அல்லாஹ் இதனை தனது அடியார்களின் உள்ளங்களில் உருவாக்கி இருக்கின்றான். தனது அடியார்களில் எவர் மற்றவர்கள் மீது கருணை காட்டுகின்றாரோ அவர் மீதே அல்லாஹ்வும் கருணை காட்டுகின்றான். இது உணர்வுப் பூர்வமான நிலை என்றால் அதில் எந்தத் தவறும் இல்லை. அது அல்லாஹ்வின் அருள் மட்டுமே ஆகும் என்று கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஜனாயிஸ்.... ஹதீஸ் எண் 1284)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களுக்கு நோய் ஒன்று ஏற்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப், ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது ஆகியோரை தம்முடன் அழைத்துக் கொண்டு அன்னாரை நலம் விசாரிப்பதற்காக சென்றார்கள். அவர்கள் அங்கு சென்றடைந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரது வீட்டில் மக்கள் கூட்டத்தை கண்டார்கள். இவர் மரணித்து விட்டாரா? மக்கள் ஒன்றுகூடி இருக்கின்றனரே? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். கடுமையான நோயின் பாதிப்பினால் அன்னார் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். எனவே சுற்று வட்டாரத்திலுள்ள குடும்பத்தினர்கள் ஒன்றுகூடி இருந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அவர் மரணமடையவில்லை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கேள்விக்கு பதிலளித்தார்கள்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு அருகில் சென்றார்கள். அவரின் நிலையைக் கண்டதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அழத் தொடங்கினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அழுவதை மக்களும் கண்டனர். எனவே மக்களும் அழுதனர். பின்னர் நீங்கள் கேட்பதில்லையா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். கண்கள் கண்ணீர் வடிப்பதால் அல்லாஹ் தண்டனை வழங்குவதில்லை. அதேபோன்று உள்ளம் துன்பப்படுவதாலும் அல்லாஹ் தண்டனை வழங்குவதில்லை. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்க நனது நாவை நோக்கி சைகை செய்தவாறு இதன் காரணமாக ஒன்று அல்லாஹ் தண்டனை வழங்குவான். அல்லது கருணை காட்டுவான் என்று கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் ஜனாயிஸ்... ஹதீஸ் எண் 1304)

மரணித்தவரின் குடுத்தினர் ஒப்பாரி வைப்பதன் காரணமாக மய்யத்திற்கு வேதனை ஏற்படுகிறது. அதாவது ஒப்பாரி வைப்பது தவறாகும். சஅத் பின் உபாதா அவர்களின் நிலையைக் கண்டு அல்லது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துஆ செய்த நிலையில் அன்னாருக்கு அழுகை வந்திருக்கலாம். ஆனால் மற்றவர்கள் இது அவரின் இறுதி நேரமாகும் என்று கருதி அழுது விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு புரிய வைத்தார்கள். அதாவது அழுவது தடை செய்யப்படவில்லை. தீய விஷயம் என்னவென்றால் அல்லது தடுக்கப்பட்ட விஷயம் என்னவென்றால் மனிதன் அல்லாஹ்வின் இறைநியதி வெளிப்படும்போது அதில் அதிருப்தி கொள்வதே தவறாகும். எனவே அல்லாஹ்வின் திருப்தியை வேண்டியவாறு கண்ணீர் வெளிப்பட்டால் அது அல்லாஹ்வின் கருணையை ஈர்க்கும். மாறாக, அதிருப்தி கொண்டு கண்ணீர் வடித்தால் மேலும் ஒப்பாரி வைத்தால் பின்னர் அதற்கு தண்டனை கிடைக்கும். ஆக எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்கள் அப்போது மரணித்திருக்கவில்லை. அன்னார் கடுமையாக நோயுற்றிருந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தோம். அப்போது அன்ஸார்களில் ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சலாம் கூறினார். பின்னர் அந்த அன்ஸாரி தனது முகத்தை திருப்பிக் கொண்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம், எனது அன்ஸார் சகோதரரே! எனது சகோதரரான சஅத் பின் உபாதா அவர்களின் நிலை எப்படி உள்ளது? என்று கேட்டார்கள். அதற்கு அவர், பரவாயில்லை என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களில் எவர் அவரை நலம் விசாரித்து வருவார் என்று கேட்டார்கள். சஹாபாக்கள் எழுந்தார்கள். நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் எழுந்தோம். நாங்கள் 10 க்கும் கூடுதலான நபர்களாக இருப்போம். நாங்கள் செருப்பும், தொப்பியும், சட்டையும் அணிந்திருக்கவில்லை. அதாவது வேக வேகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சென்று விட்டோம். அதாவது நாங்கள் பூமியில் எந்த அளவுக்கு நடந்து சென்றோம் என்றால் இறுதியில் நாங்கள் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களின் வீட்டை சென்றடைந்தோம். மக்கள் அவரை சுற்றி ஒன்றுகூடி இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வந்ததும் மக்கள் கலைந்து விட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாருடைய சஹாபாக்கள் அன்னாருக்கு அருகில் வந்தனர். இது சஹீஹ் முஸ்லிமில் இடம் பெற்றுள்ள அறிவிப்பாகும். இந்த முதல் சம்பவம் இந்த அறிவிப்பில் இடம் பெற்றுள்ளது.

(சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் ஜனாயிஸ்... ஹதீஸ் எண் 2138)

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஹராம் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எனது தந்தையார் என்னிடம் ஹரீரா என்ற திண்பண்டத்தை தயார் செய்யுமாறு கட்டளையிட்டார்கள். எனவே நான் ஹரீராவை தயார் செய்தேன். ஹரீரா என்பது மிகவும்

## திருக்குர்ஆனிலிருந்து...

ஒரு சமுதாயத்தினர் உங்களை தூய பள்ளிக்குச் செல்ல விடாது தடுத்தார்கள் என்ற பகைமையினால் வரம்பு மீறாதீர்கள். நேர்மையிலும், இறையச்சத்திலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவுங்கள். பாவம், வரம்பு மீறுதல் ஆகியவற்றிலும் ஒருவருக்கொருவர் உதவாதீர்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வின் தண்டனை கடினமானது. (5:3)

M.Y. Shahul Hameed, Melapalayam

பிரபலமான ஒரு தின்பண்டமாகும். அது கோதுமை, நெய் மற்றும் தண்ணீரால் தயாரிக்கப்படுகின்றது. இன்னும் சொல்வதென்றால், கோதுமை மற்றும் பால் ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.

எவ்வாறிருப்பினும் அவர்களின் கட்டளைக்கேற்ப அவர் ஹரீராவை தயார் செய்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் எடுத்துக் கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்போது வீட்டில் இருந்தார்கள். ஜாபிரே! இது என்ன இறைச்சியா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு நான், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இல்லை. இது ஹரீராவாகும் என்று கூறினேன். மேலும் எனது தந்தையாரின் கட்டளையின்படி இதனை நான் தயார் செய்துள்ளேன். மேலும் எனது தந்தையின் கட்டளையின்படி நான் வந்துள்ளேன் என்றும் கூறினேன்.

பின்னர் நான் எனது தந்தையிடம் வந்தேன். எனது தந்தை என்னிடம், நீர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கண்டாயா? என்று கேட்டார்கள். அதற்கு நான், ஆம் என்று கூறினேன். எனது தந்தையார் என்னிடம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்ன கூறினார்கள் என்று கேட்டார்கள். அதற்கு நான், ஜாபிரே! இது என்ன இறைச்சியா ? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் கேட்டார்கள் என்று கூறினேன்.

அதைக் கேட்ட பிறகு எனது தந்தையார், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒருவேளை இறைச்சி உண்பதற்கு விருப்பம் இருக்கலாம் என்று கூறினார்கள். எனவே எனது தந்தையார் ஆட்டை அறுத்தார்கள். பிறகு அதனை சமைத்து, இதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கொண்டு செல்லுங்கள் என்று எனக்கு கட்டளையிட்டார்கள். நான் அந்த ஆட்டின் இறைச்சியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கொண்டு சென்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வே! அன்ஸார்களுக்கு எங்கள் சார்பாக மேலான நற்கூலியை வழங்குவாயாக. குறிப்பாக அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஹராம் மற்றும் சஅத் பின் உபாதா அவர்களுக்கு நற்கூலியை வழங்குவாயாக என்று துஆ செய்தார்கள்.

ஹஸ்ரத் அபூ உஸைது அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அன்ஸார்களின் குடும்பங்களில் மிகச் சிறந்த குடும்பம் பனூ நஜ்ஜார் குடும்பமாகும். பிறகு அபூ அப்பே அஷ்அலின் குடும்பமாகும். பிறகு பனூ ஹாரிஜ் பின் கஸ்ரஜ் குடும்பமாகும். பிறகு பிறகு பனூ சாயிதாவின் குடும்பமாகும். அன்ஸார்களின் அனைத்து குடும்பங்களிலும் நன்மை உள்ளது. இதைக் கேட்டு ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களை விட அவர்களை மேன்மையானவர்களாக குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று கூறினார்கள். அதற்கு ஏராளமான மக்களை விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களுக்கு மேன்மையை வழங்கியுள்ளார்களே என்று கூறப்பட்டது.

(அல்முஸ்தத்ரிக் அலஸ் சஹ்யைன் தொகுதி 5 பக்கம் 39,40 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது & ஃபத்ஹுல் பாரி கிதாபுல் அத்அமா தொகுதி 9 பக்கம் 678 – கராச்சியிலுள்ள கதீமீ குதுப் ஹானாவில் அச்சிடப்பட்டது)

இப்போது அபூ உஸைத் அன்ஸாரி சஹாபி சாட்சியம் வழங்குகின்றார்கள்: அன்ஸார்களின் குடும்பங்களில் மிகச் சிறந்த குடும்பம் பனூ நஜ்ஜார் குடும்பமாகும். பிறகு அபூ அப்பே அஷ்அலின் குடும்பமாகும். பிறகு பனூ ஹாரிஜ் பின் கஸ்ரஜ் குடும்பமாகும். பிறகு பிறகு பனூ சாயிதாவின் குடும்பமாகும். அன்ஸார்களின் அனைத்து குடும்பங்களிலும் நன்மை உள்ளது.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3807)

அபூ சல்மா என்ற அறிவிப்பாளர் ஹஸ்ரத் அபூ உஸைர் கூறியதாக அறிவிக்கின்றார்: அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த அறிவிப்பை செய்யும்படி என்னை நியமித்தார்கள். நான் தவறு செய்யக்கூடியவனாக இருந்திருந்தால் நான் நிச்சயமாக எனது சமுதாயமான பனூ சாயிதாவிடமிருந்தது துவங்கி இருப்பேன். இக்கூற்று ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களை சென்றடைந்தது. இது அவர்களுக்கு மிகவும் கஷ்டத்தை தந்தது.

இதற்கு முந்தைய அறிவிப்பிலும் எங்களைப் பிற்படுத்தி விட்டார்கள் என்ற எண்ணம் வெளிப்பட்டிருந்தது. எந்த அளவுக்கு என்றால் நான்கு குடும்பத்தினரில் நாங்கள் இறுதியானவர்களாக ஆகி விட்டோம் என்ற எண்ணம் இருந்தது.

சஅத் பின் உபாதா அவர்கள் கூறினார்கள்: எனக்காக கழுதையின் கடிவாளத்தை கட்டுங்கள் என்று கூறி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சென்றடைந்தார்கள். அவர்களின் அண்ணன் மகன் சஹல் அன்னாரிடம், நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த கூற்றை ரத்து செய்வதற்காகவா செல்கின்றீர்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எடுத்துரைத்த தரவரிசையில் காரணமின்றி கேள்வி கேட்கவா செல்கின்றீர்கள்.

ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ அதிகம் அறிந்தவர்களாக இருக்கின்றார்கள். நான்கில் ஒன்றாக இருப்பது உங்களுக்கு போதுமானதாக இல்லையா? என்று அவர்கள் கேட்டார்கள். இதைக் கேட்ட அவர்களது எண்ணம் மாறியது. மேலும் அல்லாஹ்வும், அவனது தூதரும் எல்லாரையும் விட நன்கறிவர் என்று கூறினார்கள். பின்னர் கழுதையின் கடிவாளத்தை அவிழ்த்து விடும்படி கட்டளையிட்டார்கள். கடிவாளம் அவிழ்க்கப்பட்டது. சஹீஹ் முஸ்லிமில் இந்த அறிவிப்பு இடம் பெற்றுள்ளது.

(சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் ஃபஸாயில்.... ஹதீஸ் எண் 6425)

ஹிஷாம் பின் உர்வா தனது தந்தையாரிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்கள் இந்த துஆவை செய்து வந்தார்கள். அல்லாஹ்வே! என்னை புகழுக்குரியவனாக ஆக்குவாயாக. மேலும் என்னை கண்ணியத்திற்குரியவனாகவும், சிறப்பிற்குரியவனாகவும் ஆக்குவாயாக. கண்ணியமும், சிறப்பும் நல்ல பணிகளை செய்யாமல் கிடைக்காது. நல்ல பணி செய்யவில்லை என்றால் பின்னர் கண்ணியமும் கிடைக்க முடியாது; சிறப்பும் கிடைக்க முடியாது. நல்ல பணி செல்வமின்றி கிடைக்க முடியாது. அல்லாஹ்வே! எனக்கு குறைவானது உகந்ததல்ல. என்னால் அதில் திருப்தியடைய முடியாது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 461 சஅத் பின் உபாதா – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆக இது அன்னாருடைய துஆ செய்கின்ற ஒரு வழிமுறையாக இருந்துள்ளது.

சஹீஹ் முஸ்லிமில் ஓர் அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் அபூஹுரைரா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்கள் கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் எனது மனைவியுடன் வேறு ஒரு நபரைப் பார்த்தால் அவனை அடிக்கக் கூடாதா? தவறான நிலையிலும் கூட நான் நான்கு சாட்சியங்களை கொண்டு வர வேண்டுமா? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம் என்று பதிலளித்தார்கள். அதற்கு அவர்கள், ஒருபோதும் முடியாது.

எந்த இறைவன் உங்களை உண்மையுடன் அனுப்பினானோ அந்த இறைவன் மீது ஆணையாக! நான் அந்த இடத்தில் இருந்தால் அதற்கு முன்பாகவே விரைவாக வாளின் மூலம் அவனது கதையை முடித்து விடுவேன். நான் எந்த சாட்சியத்தையும் தான் தேடிக் கொண்டிருக்க மாட்டேன். மாறாக, நான் அவனை கொன்று விடுவேன் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மக்களே! கேளுங்கள். உங்களது தலைவர் என்ன கூறுகின்றார் என்று கேளுங்கள். அவர் மிகவும் ரோஷக்காரர் ஆவார். நான் அவரை விடவும் மிகவும் தன்மானம் கொண்டவன் ஆவேன் என்று கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், என்னை விடவும் அல்லாஹ் மிகவும் தன்மானம் மிக்கவன் ஆவான் என்று கூறினார்கள்.

(சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் லஆன் ஹதீஸ் எண் 3763)

மேலும் சஹீஹ் முஸ்லிமில் ஒரு அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் முகைரா பின் ஷுஃபா அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்கள் கூறினார்கள். நான் ஒரு நபரை எனது மனைவியுடன் இருப்பதைப் பார்த்தால் நான் அவரைக் கொன்று விடுவேன் என்று கூறினார். இந்த விஷயம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சென்றடைந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் சஅதின் ரோஷத்தைக் கண்டு ஆச்சரியப்படுகின்றீர்களா?

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அவரை விடவும் தன்மானம் மிக்கவன் ஆவேன். மேலும் அல்லாஹ் என்னை விடவும் தன்மானம் மிக்கவன் ஆவான். அல்லாஹ் தனது தன்மானத்தின் காரணமாகவே வெட்கக்கேடானவற்றை தடை செய்திருக்கின்றான். எந்த நபரும் அல்லாஹ்வை விட தன்மானமிக்கவரும் இல்லை; அல்லாஹ்வை விட மனம் திருந்துவதை விரும்புபவனும் வேறு எவனுமில்லை. அல்லாஹ் தவ்பாவை விரும்புகின்றான். மன்னிப்பை விரும்புகின்றான். இதில் அல்லாஹ்வை விட மிகைத்தவன் வேறு எவனும் இல்லை என்று கூறினார்கள்.

மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனவேதான் அல்லாஹ் நபிமார்களை நற்செய்தி வழங்கக்கூடியவராகவும், எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்புகின்றான். அவர்கள் நற்செய்தியையும் வழங்குகின்றனர். எச்சரிக்கையும் செய்கின்றனர். அல்லாஹ்வை விட அதிகமாக புகழை விரும்புபவன் எவனும் இல்லை. இதன் காரணமாகவே அல்லாஹ் சுவர்க்கத்திற்கு வாக்குறுதி அளித்துள்ளான்.

(சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் லஆன் ஹதீஸ் எண் 3764)

தீமையிலிருந்து விலகுவது அல்லாஹ்வை புகழ்வது ஆகும். அடுத்து அல்லாஹ் இதன் காரணமாகவே சுவர்க்கத்திற்கான வாக்குறுதியை வழங்கியுள்ளான். அதாவது அல்லாஹ் தண்டனையும் வழங்குகின்றான் என்றால் கூட அதில் அவரசப்படுவதில்லை. மனிதன் வேண்டுமானால் நான் தன்மானம் கொண்டேன்; அதில் அவரசப்பட்டு விட்டேன் என்று கூறலாம். அல்லாஹ் தவ்பாவை ஒப்புக் கொள்ளக் கூடியவனும், தவ்பா செய்யக்கூடியவர்களை அல்லாஹ் மன்னிக்கவும் செய்கின்றான். மேலும் அருளவும் செய்கின்றான். அதாவது வெறும் மன்னிப்பது மட்டுமல்ல. மாறாக, அருளவும் செய்கின்றான். எனவே அல்லாஹ்வின் சட்டத்தை விட முன்னே செல்லாதீர்கள். அல்லாஹ் வகுத்த சட்டத்திற்கு இருங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

முஸ்னத் அஹ்மது பின் ஹம்பலில் ஒரு ஹதீஸ் உள்ளது. ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இன்ன கோத்திரத்தின் சதகாக்களின் மேற்பார்வையை நீங்கள் செய்யுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் கூறினார்கள். ஆனால் கியாமத் நாளன்று உங்களது தோளில் ஒரு இளம் ஒட்டகத்தை சுமந்து கொண்டு அது கதறுகின்ற நிலையில் நீங்கள் வருபவராக இருக்கக்கூடாது என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அப்படி என்றால் இந்த பொறுப்பை நீங்கள் வேறொரு நபரிடம் ஒப்படைத்து விடுங்கள் என்று அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அந்த பணியை அவரிடம் ஒப்படைக்கவில்லை.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 473
முஸ்னத் சஅத் பின் உபாதா ஹதீஸ் எண் 22828 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது பொறுப்பின் உரிமையை செலுத்த வேண்டும். நீதியுடன் நடக்க வேண்டும். எவ்வித நம்பிக்கைத் துரோகமும் செய்யக்கூடாது. நம்பிக்கைத் துரோகம் செய்வதும், நீதியுடன் நடக்காமல் இருப்பதும், பொறுப்பிற்குரிய உரிமையை செலுத்தாமல் இருப்பதும் மாபெரும் பாவமாகும். கியாமத் நாளன்று அதற்கு பதிலளிக்க நேரிடும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் ஆறு அன்ஸார்கள் திருக்குர்ஆனை ஒன்றுசேர்த்தார்கள். அதில் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா அவர்களும் அடங்குவார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 503 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அன்ஸார்களில் திருக்குர்ஆனை மனனம் செய்தவர்களில் மிகவும் பிரபல்யமான பெயர்கள் இதுவாகும். உபாதா பின் சாமத், மஆஸ், மஜ்மஹ் பின் ஹாரிஸா, ஃபஸாலா பின் உபைது, முஸ்லிமா பின் முஹ்லத், அபூ ஸைத், ஸைது பின் சாபித், அபீ பின் கஅப், சஅத் பின் உபாதா உம்மே வர்கா ஆகியோர் ஆவர். சஹாபாக்களில் ஏராளமானவர்கள் திருக்குர்ஆனை மனனம் செய்திருந்தார்கள் என்பது வரலாற்றிலிருந்து நிரூபணமாகின்றது.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 430)

இவர்களைப் பற்றிய விஷயங்களில் சிறிதளவே எஞ்சியுள்ளது. அது இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்தில் கூறப்படும்.

*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

**தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)**

**தொலைபேசி எண்:**

***1800 103 2131***

**இந்த TOLL FREE எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.**

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

**O.A.N. DOORS & STEELS**



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 13 February 2020 Issue No. 7

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

**நாம் எல்லாரையும் விட சிறந்தவராகவும், எல்லாரையும் விட மேன்மைமிக்கவராகவும், எல்லாரையும் விட உயர் தகுதியில் இருப்பவராகவும், நாம் இந்த ஆண் மகனையே பார்க்கின்றோம். அவருடைய பெயர் முஹம்மது (ஸல்லல்லாஹி அலைஹி வஸல்லம்)**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

''நாம் எல்லாரையும் விட சிறந்தவராகவும், எல்லாரையும் விட மேன்மைமிக்கவராகவும், எல்லாரையும் விட உயர் தகுதியில் இருப்பவராகவும், நாம் இந்த ஆண் மகனையே பார்க்கின்றோம். அவருடைய பெயர் முஹம்மது (ஸல்லல்லாஹி அலைஹி வஸல்லம்).

إِنَّ اللَّهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ ۚ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا

எந்த சமுதாயங்களின் பெரியோர்களின் நிலைமை தொடர்பாக திருக்குர்ஆனில் கூறப்படவில்லையோ அவர்களைப் பற்றிப் பேசுவதை விட்டு விடுங்கள். எந்த நபிமார்களைப் பற்றி திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளதோ அவர்களைப் பற்றி மட்டும் நாம் நமது கருத்துக்களைத் தெரிவிக்கின்றோம். உதாரணமாக, ஹஸ்ரத் மூஸா, ஹஸ்ரத் தாவூது, ஹஸ்ரத் ஈஸா அலைஹிமுஸ்ஸலாம் மற்றும் ஏனைய நபிமார்கள்.

எனவே நாம் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலகில் வராமல் இருந்திருந்தால், திருக்குர்ஆன் இறங்காமல் இருந்திருந்தால், நாம் கண்ட அந்த அருள்களை நமது கண்களால் பார்க்காமல் இருந்திருந்தால், இந்த எல்லா நபிமார்களது உண்மையும் நமக்கு சந்தேகத்திற்குரியதாக இருந்திருக்கும். ஏனென்றால், கதைகளால் மட்டும் எந்த உண்மையையும் பெற்றுக் கொள்ள முடியாது. அந்தக் கதைகள் சரியானவையாக இல்லாமல் இருக்கலாம். அந்த நபிமார்களுடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகின்ற அனைத்து அற்புதங்களும் மிகையாகக் கூறப்பட்டவையாகவும் இருக்கலாம். ஏனென்றால், இப்போது அவற்றின் பெயரும் அடையாளமும் இல்லை.

இன்னும் சொல்லப்போனால், இந்தக் கடந்த கால வேதங்களிலிருந்து இறைவனைப் பற்றித் தெரியவே முடியவில்லை. மேலும் இறைவனும் மனிதனுடன் உரையாடுகின்றான் என்பதை உறுதியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தோற்றத்தின் மூலம் இந்த எல்லாக் கதைகளும் உண்மை வடிவத்தைப் பெற்று விட்டன.

இப்போது இறைவனுடன் உரையாடுவது என்றால் என்ன? மேலும் இறைவனின் அடையாளம் எவ்வாறு வெளிப்படும்? எவ்வாறு துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்? என்ற விஷயத்தை வெறும் சொல்லால் (கூறுவதுடன்) மட்டுமின்றி அனுபவத்தால் நாம் நன்றாகப் புரிந்திருக்கின்றோம். இவை அனைத்தையும் நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் மூலமாகப் பெற்றுக் கொண்டோம். எவற்றையெல்லாம் மாற்று சமுதாயங்கள் கதைகளாக எடுத்துக் கூறுகின்றனவோ அவை அனைத்தையும் நாம் (உண்மையாக இருப்பதை) பார்த்து விட்டோம். எனவே நாம் இறைவனை காட்டக்கூடிய ஒரு நபியின் ஆடையைப் பற்றிப் பிடித்துள்ளோம். ஒருவர் இந்தக் கவிதையை மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார்.

*முஹம்மதே அரபி (ஸல்) அவர்கள்*
*ஈருலக அரசராக இருக்கின்றார்கள்!*
*பரிசுத்த ஆவி (ஜிப்ரீல்)*
*அவரது வீட்டின் காவலராக இருக்கின்றார்!*
*ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை*
*இறைவன் என்று என்னால் கூற முடியாது!*
*அவரது உயர் தகுதியை அறிந்து கொள்வதன் மூலமே*
*இறைவனை அறிந்து கொள்ள முடியும்!*

நாம் எந்த நாவால் இறைவனுக்கு நன்றி செலுத்த முடியும்? கோள்களுக்கு சூரியன் இருப்பது போன்று நல்ல ஆன்மாக்களுக்கு சூரியனாக இருக்கின்ற அத்தகைய நபியைப் பின்பற்றும் நற்பேற்றை அவன் நமக்கு வழங்கியுள்ளான். அவர் இருண்ட காலத்தில் தோன்றினார். உலகை தனது ஒளியால் ஒளிமயமாக்கினார். அரபு நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளையும் இறைவனுக்கு இணை வைப்பதிலிருந்து தூய்மையாக்காத வரையில் அவர் சோர்வடையவும் இல்லை; தளர்ந்து விடவும் இல்லை. தனது உண்மைக்கு அவரே ஆதாரமாவார். ஏனென்றால் அவரது ஒளி ஒவ்வொரு காலத்திலும் இருக்கின்றது. ஒரு தூய தெளிந்த ஆற்றின் தண்ணீர் அழுக்கான ஆடைகளை சுத்தம் செய்வது போன்றே அவரை உண்மையாகப் பின்பற்றுவது மனிதனை தூய்மைப்படுத்துகின்றது. உண்மையான உள்ளத்துடன் நம்மிடம் வந்துள்ள எவர் தான் அவரது ஒளியைக் காணாமல் இருந்துள்ளார்? நல்லெண்ணத்துடன் அவரது கதவைத் தட்டிய எவருக்குத்தான் அது திறக்கப்படாமல் இருந்திருக்கின்றது. ஆனால் அந்தோ பரிதாபம்! பெரும்பாலான மனிதர்களின் வழக்கம் இவ்வாறே இருக்கின்றது. அதாவது அவர்கள் கீழ்த்தரமான வாழ்க்கையை விரும்புகின்றனர். ஒளி அவர்களுக்குள் நுழைவதை அவர்கள் விரும்புவதில்லை. (சஷ்மயே மஃரிஃபத் – ரூஹானீ கஸாயின், தொகுதி 23, பக்கம் 301–303)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad